கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 147/2016**

திரு. அருண் (D.W –3) **7.4.2025**

<u>3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. என்ன படித்துள்ளேன் என்றால் பட்டப்படிப்பு படித்துள்ளேன். தாவா விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரி. தாவா சொத்தை கிரயம் பெறும் போது சட்ட கருத்துரை பெற்றேனா என்றால் பெற்றேன். சொத்துக்கள் பாத்தியப்பட்ட நபருக்கு யாரெல்லாம் வாரிசுதாரர்கள் என்று எனக்குத் தெரியாது என்றால் தெரியும். தாவா சொத்தை யாரிடம் இருந்து கிரயம் பெற்றேன் என்றால் ரவியிடம் இருந்து கிரையம் பெற்றேன். ரவிக்கு தாவா சொத்து அவருடைய தகப்பனார் தான செட்டில்மெண்ட் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். மோகனசுந்தரம் பெயரில் உள்ள கிரைய ஆவணம் பி.வா.ச.ஆ–20 படித்துப் பார்த்தேன் என்றால் ஆமாம். அந்தக் கிரைய ஆவணத்தில் இளவர் கிருஷ்ணகுமார் சேர்ந்து கிரயம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மற்ற வாரிசுதாரர்கள் அதில் கையொப்பம் செய்துள்ளார்களா என்றால் இல்லை.

2. பி.வா.ச.ஆ–20 ஆவணத்தில் கிரையம் செய்து கொடுத்த நபர்கள் அந்த சொத்து அவர்களுக்கு பிதுராஜ்ஜிய வகையில் பாத்தியப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரி. பிதுராஜ்ஜிய சொத்துக்களில் வாதிக்கு பங்கு உள்ளது என்றால் தவறு. அது கோவிந்தசாமியின் சொத்து. பி.வா.ச.ஆ–17 என் பேரில் உள்ள கிரைய ஆவணத்தின் சொத்து விவரத்தில் பொதுவில் ஒரு ஏக்கர் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். நான்கு பக்க எல்லைகள் சொல்லப்படவில்லை என்றால் சரி. அந்த சொத்து தற்சமயம் தரிசு நிலமாக உள்ளது என்றால் ஆமாம்.பி.வா.ச.ஆ–17 ஆவணம் வாதி பாகத்தை பொறுத்து

கட்டுப்படுத்தாது. அது செல்லாது என்றால் சரியில்லை. தாவா வாதி கோரியப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.04.07 18:31:19 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.